நோயாளி தகவல் கையேடு

# கிளின்டமைசின்

## (CLINDAMYCIN)

MINISTRY OF HEALTH
SINGAPORE

SINGHEALTH / PIL / T88R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**கிளின்டமைசின் நுண்ணுயிர்கள் ஏற்படுத்தும் கிருமித்தொற்றுகளுக்குச் சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படும் ஒரு ஆன்டிபயோடிக் மருந்தாகும். இத்தொற்றுகளில் மூச்சுக் குழாய், தோல் மற்றும் மென் திசு, இரத்தம் மற்றும் பிறப்புறுப்புக் குழாய்களில் ஏற்படும் தொற்றுகள் அடங்கும். முகப் பருக்களின் மேல் தடவவும் இம்மருந்து பயன்படுத்தப்படுகிறது.**

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்/தடவ வேண்டும்?

**கிளின்டமைசின் (வாய்வழி மருந்து):**

வயிறு பாதிக்காமலிருக்க, கிளின்டமைசினை உணவுடனோ அல்லது பாலுடனோ உட்கொள்ளலாம். ஒவ்வொரு வேளை மருந்தையும் ஒரு முழு கிளாஸ் தண்ணீருடன் எடுங்கள்.

நீங்கள் குணமடைய ஆரம்பித்தாலும்கூட, கொடுக்கப்படும் மாத்திரைகள் அனைத்தையும் முடித்துவிட வேண்டும். பாதியிலேயே நிறுத்தினால், தொற்று மீண்டும் பாதிக்கலாம் அல்லது சிகிச்சைக்கு எதிர்ப்பு உருவாகலாம். எனினும், தோல் தடிப்புகள், கண்கள் வீங்குதல் அல்லது மூச்சு விடச் சிரமப்படுதல் போன்றவை இருந்தால், மருந்தை நிறுத்திவிட்டு மருத்துவரைப் பாருங்கள்.

வயிற்றுப்போக்கிற்கு தரப்படும் கயோலின் (kaolin) மருந்து கிளின்டமைசினின் செயல்திறனைக் குறைக்கும். எனவே, கிளின்டமைசின் எடுக்கும்போது கயோலின் எடுக்கக் கூடாது.

**கிளின்டமைசின் (தடவும் மருந்து):**

தடவு மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன்னரும் பின்னரும் கைகளைக் கழுவுங்கள்.

மருந்து தடவ வேண்டிய இடத்தைச் சுத்தம் செய்து ஈரம் போகத் துடையுங்கள். பிறகு மருந்தை அவ்விடத்தில் மெலிதாகத் தடவுங்கள். இம்மருந்தை ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு முறை பயன்படுத்தலாம். மருத்துவரின் குறிப்புகளைப் பின்பற்றுங்கள்.

மருந்து தடவும்போது அது கண்கள், மூக்கு, வாய் மற்றும் உதடுகளில் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பட்டுவிட்டால் அவ்விடத்தை உடனே நீரில் கழுவுங்கள்.

மருந்து பலனளிக்க 3 மாதங்கள் வரை ஆகலாம். எனவே, பயன்படுத்திய உடனேயே பலன் தெரியாவிட்டாலும் மருந்தை நிறுத்தாதீர்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

கிளின்டமைசின் (வாய்வழி மருந்து):

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே எடுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை மட்டும் அதற்குரிய நேரத்தில் எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

கிளின்டமைசின் (தடவு ம் மருந்து):

மருந்து தடவ மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே தடவுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் போடத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை மட்டும் தடவுங்கள். தடவுவதற்கு முன் குறைந்தது 12 மணி நேர இடைவெளி விடுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

பின்வரும் கடுமையான பக்க-விளைவுகளில் ஏதேனும் ஒன்று ஏற்பட்டாலும், கிளின்டமைசின் உட்கொள்வதை/தடவுவதை நிறுத்திவிட்டு உடனே அவசர மருத்துவ உதவி நாடுங்கள்:

- ஒவ்வாமை பாதிப்புகள் (உதடு, நாக்கு, அல்லது முகம் வீங்குதல், மூச்சுத் திணறல், தொண்டை அடைத்து கொள்ளுதல்; அல்லது தோல் அரிப்பு); தோல் தடிப்பு; கடுமையான வயிற்றுப்போக்கு அல்லது வயிற்றுவலி; தோல் அல்லது கண்கள் மஞ்சள் நிறமாதல் சீறுநீர் சிறிதளவே கழித்தல் அல்லது அது அறவே நின்றுவிடுதல்.

மற்ற சாதாரண பக்க-விளைவுகளும் ஏற்படலாம். அப்போதும் மருந்தைத் தொடர்ந்து எடுத்து/தடவி வாருங்கள். குமட்டல் உணர்ச்சி, வாந்தி, பசி குறைதல், அஜீரணத்தால் ஏற்படும் நெஞ்செரிச்சல், வாய் கசத்தல் அல்லது வாயில் உலோகச் சுவை போன்றவை இருந்தால் மருத்துவரிடம் கூறுங்கள்.

மேலே குறிப்பிடாத வேறு சில பக்க-விளைவுகளும் இருக்கலாம். வழக்கத்திற்கு மாறான, அல்லது அதிகத் தொல்லை தரும் பக்க-விளைவு இருந்தால், அதை மருத்துவரிடம் கூறுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

கிளின்டமைசின் (வாய்வழி மருந்து):

பின்வரும் நோய்கள் இருக்கும்போது நீங்கள் கிளின்டமைசின் மருந்தை எடுக்க முடியாமல் போகலாம், அல்லது அதைக் குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கலாம், அல்லது உங்களை அணுக்கமாகக் கவனிக்கத் தேவைப்படலாம் :

- கல்லீரல் நோய், சிறுநீரக நோய், இரைப்பை அல்லது சிறுகுடல் நோய்.

கிளின்டமைசின் வயிற்றிலுள்ள குழந்தையைப் பாதிக்குமா என்பது தெரியவில்லை. நீங்கள் கர்ப்பமாக இருந்தால், மருத்துவரின் ஆலோசனை பெறாமல் இந்த மருந்தை உட்கொள்ளாதீர்கள்.

கிளின்டமைசின் தாய்ப்பாலில் கலந்துவிடக்கூடியது என்பதால் தாய்ப்பால் குடிக்கும் குழந்தையை அது பாதிக்கலாம். நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், மருத்துவரின் ஆலோசனை பெறாமல் இந்த மருந்தை உட்கொள்ளாதீர்கள்.

கிளின்டமைசின் (தடவும் மருந்து):

வெடிப்பு உள்ள, அல்லது எரிச்சல் உள்ள தோல் மீது மருந்தைத் தடவாதீர்கள். அது நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடும்.

மருத்துவர் கூறினாலன்றி, இம்மருந்தைப் பயன்படுத்தும் அதே இடத்தில் மற்றத் தடவு மருந்துகளை ஒரே நேரத்தில் பயன்படுத்தாதீர்கள்.

கிளின்டமைசின் மருந்தைப் பருக்களில் தடவி வரும்போது, முகத்தில் கடும் எரிச்சலையும் காயங்களையும் ஏற்படுத்தக்கூடிய முக அழுக்கு அகற்றிகள் (சலொெநஸரெஸ), வாசனைத் தைலங்கள் அல்லது ஒப்பனைப் பொருட்கள் போன்றவற்றை முகத்தில் பயன்படுத்தாதீர்கள்.

இம்மருந்து கருவிலிருக்கும் குழந்தையை பொதுவாகப் பாதிக்காது. எனினும், நீங்கள் கர்ப்பமாக இருந்தால், இதைப் பயன்படுத்துவதற்கு முன்பாக மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

இம்மருந்து தாய்ப்பாலில் கலந்துவிடக்கூடியது என்பதால் தாய்ப்பால் குடிக்கும் குழந்தையை அது பாதிக்கலாம். நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், மருத்துவரின் ஆலோசனை பெறாமல் இம்மருந்தைப் பயன்படுத்தாதீர்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தை ஒரு குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். மருந்தின்மீது ஈரம், வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

